**ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 37 ஆவது அமர்வில் இலங்கை பங்குபற்றவுள்ளது.**

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவை ஒவ்வொரு ஆண்டும் மூன்று தடவைகள் அதன் வழக்கமான அமர்வுகளை முன்னெடுக்கிறது. அதாவது பெப்ரவரி - மார்ச், ஜுன் மற்றும் செப்டெம்பர் மாதங்களிலாகும். இந்த பேரவையின் 37 ஆவது அமர்வு, 2018 பெப்ரவரி 26 ஆந் திகதி ஆரம்பமாகி மார்ச் மாதம் 23 ஆந் திகதி நிறைவடையவுள்ளது[1].

**2018 மார்ச் மாதம் 19 ஆந் திகதி திங்கட்கிழமையன்று** நடைபெறவுள்ள இப் பேரவையின் 37 ஆவது அமர்வில், அனைத்துலக காலாந்தர மீளாய்வின் 3 ஆவது சுழற்சியின் கீழ் இலங்கையின் **அனைத்துலக காலாந்தர மீளாய்வு**(UPR) அறிக்கை ஏற்றுக்கொள்ளப்படவுள்ளது. ஒவ்வொரு 5 ஆண்டுகளுக்கொருமுறையும் 193 ஐக்கிய நாடுகள் உறுப்பு நாடுகள் அனைத்தினதும் மனித உரிமைகள் பதிவுகளின் காலாந்தர மீளாய்வினை உள்ளடக்கிய தனிப்பட்ட செயன்முறையாக இந்த அனைத்துலக காலாந்தர மீளாய்வு காணப்படுகிறது. சகல நாடுகளுக்குமான ஆய்வு மற்றும் சமனான செயற்பாடுகளின் அடிப்படையிலமைந்த செயன்முறையாக இதுவமைந்துள்ளது. 2007 ஆம் ஆண்டு UPR செயல்முறை அறிமுகம் செய்யப்பட்டதிலிருந்து, 193 ஐ.நா உறுப்பு நாடுகள் அனைத்தினதும் மனித உரிமைகள் நிலைமைகள் தொடர்பான முழுமையான இரண்டு காலாந்தர மீளாய்வு சுழற்சிகள் மீளாய்வு செய்யப்பட்டுள்ளன. தற்போதைய அனைத்துலக காலாந்தர மீளாய்வின் 3 ஆவது சுழற்சி 2017 மே மாதம் ஆரம்பிக்கப்பட்டதுடன், தற்போது முன்னெடுக்கப்பட்டு வருகிறது. இலங்கையின் அனைத்துலக காலாந்தர மீளாய்வின் 3 ஆவது சுழற்சியானது 2017 நவம்பர் 6 - 17 ஆந் திகதியிலிருந்து கூட்டப்பட்ட அனைத்துலக காலாந்தர மீளாய்வு பணிக்குழுவின் 28 ஆவது அமர்வின் போது நடைபெற்றது. இதன் போது செச்சியா, ஆர்ஜென்டினா, காபோன், கானா, பெரு, கவுதமாலா, சுவிட்சர்லாந்து, கொரிய குடியரசு, பெனின், பாகிஸ்தான், ஸம்பியா, ஜப்பான் மற்றும் உக்ரேன் ஆகிய நாடுகளும் மீளாய்வு செய்யப்பட்டன. UPR பணிக்குழுவின் 28 ஆவது அமர்வின் போது நவம்பர் மாதம் 15 ஆந் திகதி நடைபெற்ற மீளாய்வில் கலந்து கொண்ட இலங்கை தூதுக்குழு தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார விவகாரங்கள் அமைச்சின் பிரதி அமைச்சர் ஹர்ஷ டி சில்வா அவர்களினால் தலைமை தாங்கப்பட்டது[2]. மார்ச் மாதம் 19 ஆந் திகதி நடைபெறவுள்ள இப் பேரவையின் 37 ஆவது அமர்வின் போது மனித உரிமைகள் பேரவையினால் இலங்கையின் 3 ஆவது சுழற்சி அனைத்துலக காலாந்தர மீளாய்வு அறிக்கை ஏற்றுக்கொள்ளப்படவுள்ளது. இந்த அமர்வில் ஜெனிவாவிலுள்ள ஐக்கிய நாடுகளுக்கான இலங்கையின் நிரந்தரப் பிரதிநிதி ரவிநாத ஆர்யசிங்க இலங்கையை பிரதிநிதித்துவம் செய்யவுள்ளார்.

2015 ஒக்டோபர் 1 ஆம் திகதியிடப்பட்ட 30/1 தீர்மானம்[3] நிறைவேற்றப்படுவதை கவனத்தில் எடுத்துக் கொண்ட மனித உரிமைகள் பேரவை, அதன் 34 ஆவது அமர்வில்(2017 பெப்ரவரி 27 - மார்ச் 24 ஆந் திகதி வரை) 2017 மார்ச் 23 ஆந் திகதியன்று 34/1 தீர்மானத்தை[4] ஏற்றுக்கொண்டது. இந்த தீர்மானத்தின் மூலம் பேரவையானது, உயர் ஆணையாளர் அலுவலகத்திடம் இலங்கையில் நல்லிணக்கம், பொறுப்பு கூறல் மற்றும் மனித உரிமைகள் தொடர்பான பரிந்துரைகள் மற்றும் ஏனைய விடயங்களை நடைமுறைப்படுத்தல் மற்றும் மனித உரிமைகள் பேரவையிடம் அதன் 37 ஆவது அமர்வில் (அதாவது பேரவையின் தற்போதைய அமர்வில்) எழுத்து மூலமான அறிக்கையொன்றினை சமர்ப்பித்தல் போன்ற முன்னேற்ற மதிப்பீடுகளை தொடர்ந்தும் முன்னெடுக்குமாறு கோரிக்கைவிடுத்தது. பேரவையின் கோரிக்கைக்கமைய, உயர் ஆணையாளர் அலுவலகம் **2018 மார்ச் 21 ஆந் திகதி எழுத்து மூலமான அறிக்கையினை** பேரவையிடம் சமர்ப்பிக்கவுள்ளது. மார்ச் 21 ஆந் திகதி நடைபெறவுள்ள இந்த அமர்வில் வெளிநாட்டலுவல்கள் அமைச்சர் திலக் மாரப்பன மற்றும் விசேட பணிகளுக்கான அமைச்சர் சரத் அமுனுகம ஆகியோர் இலங்கை சார்பாக கலந்து கொள்ளவுள்ளனர்.

வெளிநாட்டலுவல்கள் அமைச்சு
கொழும்பு
2018 மார்ச் 16

[1] மனித உரிமைகள் பேரவையின் 37 ஆவது அமர்வு (2018 பெப்ரவரி 26 - மார்ச் 23 வரை): *http://www.ohchr.org/EN/HRBODIES/HRC/RegularSessions/Session37/Pages/37RegularSession.aspx*

[2] 2017 நவம்பர் 15 ஆந் திகதி நடைபெற்ற இலங்கையின் அனைத்துலக காலாந்தர அறிக்கையின் மூன்றாவது சுழற்சியில் கௌரவ (முனைவர்) ஹர்ஷ டி சில்வா அவர்களினால் வழங்கப்பட்ட கூற்று:
*http://mfa.gov.lk/index.php/en/media/statements/7257-statement-by-hon-dr-harsha-de-silva-deputy-minister-of-national-policies-and-economic-affairs-at-the-third-cycle-of-the-universal-periodic-review-of-sri-lanka-geneva-15-november-2017;*

[3] 2015 ஒக்டோபர் 1 ஆம் திகதியிடப்பட்ட 30/1 தீர்மானம்:
*https://documents-dds-ny.un.org/doc/UNDOC/GEN/G15/236/38/PDF/G1523638.pdf?OpenElement*

[4] 2017 மார்ச் 23 ஆந் திகதியிடப்பட்ட 34/1 தீர்மானம்:
*https://documents-dds-ny.un.org/doc/UNDOC/GEN/G17/082/56/PDF/G1708256.pdf?OpenElement*